# மாலை முரசு

பக்கங்கள் 19

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 13 வெள்ளிக்கிழமை 29.12.2023 அதிர்வு 151


## யாழில் மாணவர்களுக்கு போதைப் பாக்கு விற்ற இளைஞர் ஒருவர் கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் மாணவர்களுக்குப் போதைப் பாக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர்

04 ▶



# தமிழர்களின் வாக்குகள் சஜித்துக்கே!

## அவர்கள் பொது வேட்பாளரை விரும்பமாட்டார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. நம்பிக்கை

(சுடர் திலீபன்)

"ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவையே ஆதரிப்பார்கள். அவர்கள் ஒருபோதும் தமிழ் பொது வேட்பாளரை விரும்பமாட்டார்கள்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

04 ▶



# இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பயணித்த ஜீப் வாகனம் மீது தாக்குதல்

## கோடீஸ்வர வர்த்தகர் கைது



(ரஸீன் ரஸ்மின்)

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பயணித்த ஜீப் வாகனம், தங்கொட்டுவ பகுதியில் வைத்து தாக்கிச் சேதப்படுத்தப்பட்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் பயணித்த சொகுசு ஜீப் வாகனம், மற்றுமொரு காருடன் மோதி விபத்துக்குள்ளானதை அடுத்து, அந்தக் காரில் பயணித்தவர்கள் அமைச்சரின் வாகனத்தைத் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தங்கொடுவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் பங்குபற்றச் சென்ற வேளையில் மாரவில மொதரவெல்ல தேவாலயத்துக்கு முன்பாக வங்குவ பிரதேசத்தில் இன்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பில் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அமைச்சரின் சொகுசு வாகனம் மற்றைய காரைச் சேதப்படுத்தியுள்ளது என்றும், அதில் பயணித்த கோடீஸ்வர தொழில் அதிபர் தனது வாகனத்துக்கு ஏற்பட்ட சேதத்தைப் பார்த்து கடும் ஆத்திரமடைந்து இரும்புக் கம்பியால்

04 ▶

# தாய்த் தமிழகத் தொப்புள் கொடிதான் விஜயகாந்த்

## இரங்கல் செய்தியில் மனோ தெரிவிப்பு





இலங்கையில் வாழுகின்ற தமிழர்கள் மத்தியில் எம்மை நேசித்த, எமக்காகத் தமிழ் திரையுலகை அணி திரட்டிய, மதுரை மண்ணுக்கே உரிய வீரத் தமிழனாக எமக்காகக் குரல் எழுப்பிய தாய்த் தமிழகத் தொப் புள் கொடியான் என உணரப் பட்டவர் விஜயகாந்த் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் தே.தி.மு.க. தலைவரும் பிரபல நடிகரு மான விஜயகாந்த் மறைவு தொடர்பில் மனோ எம்.பி. வெளி யிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதா வது:-

விஜயகாந்த், தமிழ்நாட்டு திரை வானிலும், பின் அரசியல் வானிலும் சூறாவளியாக எழுந் தார். இடையில் திடீரென அமைதி தென்றலானார்.

புரட்சி கலைஞர் என்ற தமிழ் நடிகர், தே.தி.மு.க. தலைவர் என்ற எழுச்சி அரசியல்வாதி என்ற பிரபல அடையாளங்களை மீறி சிறந்த மனிதர் என ஒட்டு மொத்த தமிழுலகில் அவர் அறியப்பட்டார்.

கடல் கடந்து இலங்கை யில் வாழுகின்ற தமிழர்கள் மத் தியில், எம்மை நேசித்த, எமக் காகத் தமிழ் திரையுலகை அணி திரட்டிய, மதுரை மண் ணுக்கே உரிய வீரத்தமிழ னாய் எமக்காகக் குரல் எழுப் பிய தாய்த் தமிழகத் தொப்புள் கொடியான் என உணரப்பட்டவர் விஜயகாந்த்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பாக, ஒட்டுமொத்த இலங்கை வாழ் தமிழர்களின் அஞ்சலிகளை அவருக்குத் தெரிவித்துக்கொள் கின்றேன். அவரது குடும்பத்தா ருக்கும், அவரது தே.தி.மு.க. கட்சியினருக்கும் ஆழ்ந்த அனு தாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். - என்றுள்ளது.

# விஜயகாந்தின் பூதவுடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்திய செந்தில் தொண்டமான்

தே.மு.தி.க. தலைவர் கப்டன் விஜயகாந்த்தின் பூதவுடலுக்கு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங் கைத் தொழிலாளர் காங் கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

கப்டனுடன் பழகிய நாள் களை கிழக்கு ஆளுநர் நினைவுகூர்ந்ததுடன், விஜய காந்தின் இழப்பால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி இரங்கலும் தெரிவித்தார்.





# தனங்களப்பு பகுதியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது!

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தனங்களப்பு பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மறவன்புலவு பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஸ்கூட்டி வகை மோட்டார் சைக்கிளில் கஞ்சா பொதியை எடுத்துக் கொண்டு சாவகச்சேரி நோக்கி வந்த வேளையில் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது ஒரு கிலோ 800கிராம் கஞ்சா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் போதைப்பொருள் வியாபாரி என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வருகிறது.

கைதான சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்துள்னர்.





# யாழ். ஊடக அமையத்தின் டெங்கு விழிப்புணர்வு!

(எஸ்.நிதர்ஸன்)

யாழ். ஊடக அமையத்தின் 'மக்களுக்காக நாம்' செயற்றிட்டத்தின் கீழ் டெங்கு விழிப்புணர்வு செயற்றிட்டம் இன்று (29) காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலில் பரவல் தீவிரமடைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு யாழ். ஊடக அமையத்தின் சமூக பணிகளுக்கான 'மக்களுக்காக நாம்' செயற்றிட்டத்தின் ஊடாக இந்த விழிப்புணர்வுச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆரம்ப நாளான இன்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும், யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளருமான வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி யாழ். ஊடக அமையத்தின் தலைவர் கு.செல்வகுமாரிடம் இருந்து விழிப்புணர்வு துண்டுப் பிரசுரத்தை பெற்று செயற்றிட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.




ஊடகவியலாளர்களின் சமூக பொறுப்புமிக்க விழிப்புணர்வு பணிக்கு பாராட்டுக்களைத் தெரிவித்த பணிப்பாளர், அனைத்து மட்டங்களிலும் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப் படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் யாழ். மத்திய பேருந்து நிலையம், வர்த்தக நிலையத் தொகுதி ஆகிய இடங்களில் விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த விழிப்புணர்வு செயற்றிட்டம் தொடர்ந்து ஒரு வாரத்துக்கு டெங்கு அபாய வலயங்களில் முன்னெடுக்கப் படவுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நித்தியானந்தா, யாழ். போதனா வைத்தியசாலைப் பிரதம தாதி சந்திர மௌலீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# ஈழத்தின் இசைக்குயில் கில்மிஷாவை நேரில் சென்று வாழ்த்திக் கௌரவித்த சிறீதரன் எம்.பி.

(எஸ்.நிதர்ஷன்)

ஈழத்தின் இசைக்குயில் கில்மிஷாவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இன்று நேரில் சென்று வாழ்த்திக் கௌரவித்தார்.

தன் இசையால் உலகத் தமிழர்களின் உள்ளம் கவர்ந்த இளம் பாடகியாக உருப்பெற்று, ஈழத் தமிழர்களின் அடையாளமாக இந்தியத் தொலைக்காட்சியின் சரிகமப இசை நிகழ்வில் வெற்றியாளராக முடிசூடி, நேற்று நாடு திரும்பிய கில்மிஷாவை நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இன்று நேரில் சென்று வாழ்த்தினார்.

யாழ்ப்பாணம், அரியாலையில் உள்ள கில்மிஷாவின் வீட்டில் நடந்த இந்த நிகழ்வில், கில்மிஷாவின் குடும்பத்தினரும் உடனிருந்தனர்.





## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இராஜாங்க அமைச்சர்...

இராஜாங்க அமைச்சரின் வாகனத்தைத் தாக்கினார் என்றும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் மாரவில பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

### போதைப் பாக்கு...

கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வியங்காடு பகுதியில் இளைஞர் ஒருவர் மாணவர்களுக்கு மாவா போதைப் பாக்கு விற்பனை செய்கின்றார் என்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் பிரகாரம் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இளைஞரைக் கைது செய்தனர்.

அந்த இளைஞரைச் சோதனையிட்டபோது, அவரது உடைமையில் இருந்து சுமார் 7 கிலோ மாவா பாக்கைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேகநபர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு பொலிஸ் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

### தமிழர்களின்...

"2024ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் ஒருபோதும் தமிழ் பொது வேட்பாளரை விரும்பமாட்டார்கள். அந்த மக்களின் வாக்குகள் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கே கிடைக்கும். கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் வடக்கு – கிழக்கு மக்களின் அதிகூடிய வாக்குகள் சஜித் பிரேமதாஸவுக்குக் கிடைத்தன. எனினும், தெற்கில் சிங்கள மக்கள் மத்தியில் இருந்த இரட்டை நிலைப்பாடுகளால் அவரால் அந்தத் தேர்தலில் வெல்ல முடியாமல் போய்விட்டது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அந்தக் குழப்பம் இருக்கமாட்டாது. சிங்கள மக்கள் தெளிவடைந்து விட்டார்கள். அவர்கள் உண்மை நிலையைப் புரிந்துவிட்டார்கள். அடுத்த தடவை சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து சஜித் பிரேமதாஸவையே ஆதரிப்பார்கள். அவருக்கு அமோக வெற்றி கிடைக்கும்.

மொட்டுக் கட்சி வேட்பாளரோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரோ அல்லது ஜே.வி.பி. வேட்பாளரோ ஜனாதிபதியாக வருவதை நாட்டு மக்கள் விரும்பமாட்டார்கள். சஜித் என்ற ஒரே தலைவரால் – ஐக்கிய மக்கள் சக்தியால் மாத்திரமே இந்த நாட்டுக்கு விடிவு கிடைக்கும்."
– என்றார்.



# மட்டக்களப்பில் போதைப் பொருளைத் தேடி இன்று அதிகாலை பொலிஸார் சோதனை!

## சந்தேகத்தில் ஒருவர் கைதானார்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் போதை பொருள் வியபாரிகள் கடத்தல் காரர்களை தேடி மோப்ப நாய் சகிதம் கொட்டும் மழைக்கு மத்தியில் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணி தொடக்கம் விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து விசேட வீதிச் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது கொழும்பில் இருந்து பஸ்ஸில் பயணித்த ஒருவரை கஞ்சாவுடன் கைது செய்தனர்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் எதிரிமான, ஆலோசனையில் பொலிஸ் அத்தியட்சகர் கே.எம்.ஏ.கே. பண்டார வழிகாட்டலில் மட்டு தலைமையக பொலிஸ நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த பண்டார தலைமையில் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

ஊறணி சந்தியில் வெளிமாவட்டங்களில் இருந்து மட்டக்களப்புக்குள் நுழையும் வாகனங்கள் வெளி மாவட்டங்களுக்கு செல்லும் வாகனங்கள் அனைத்தையும் வீதியில் நிறுத்தி மோப்ப நாய் சகிதம் கொட்டும் மழையின் மத்தியில் விடிய விடிய சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர்.



மட்டக்களப்பு பிரதான ரயில் நிலையத்தைச் சுற்றிவளைத்துக் கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு அதிகாலையில் வந்தடையும் ரயிலில் பயணம் செய்த பயணிகளை மேப்ப நாய் சகிதம் பலத்த சோதனை செய்தனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பீதியைத் தரும் வருடப் பிறப்பு

நாட்டைப் பாதித்த பொருளாதாரம் நமது கல்வித்துறையையும் விட்டுவைக்கவில்லை. சமீபத்திய ஆய்வுகள் அதிர்ச்சி தரும் புள்ளி விவரப் பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருக்கின்றன.

'பொருளாதார நெருக்கடியின் தாக்கம் - 2023' தொடர்பான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வீடுகள் தோறும் மேற்கொண்ட சமீபத்திய ஆய்வில் இவ்விடயம் தெரியவந்துள்ளது.

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து சுமார் 54.9 வீதமான இலங்கை மாணவர்களின் கல்வி பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த ஆய்வு அறிக்கை தெரிவிக்கின்றது.

புள்ளிவிவரக் கணக்கெடுக்கப்பில் பதிலளித்தவர்களில் 93.5 சதவீதம் பேர் பள்ளிக் கல்வியில் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை எதிர்கொள்ள குறைந்தபட்சம் ஓர் உத்தியைக் கடைப்பிடித்துள்ளனர்.

பெரும்பான்மையினரால் - 53.2 சதவீதத்தினரால் - பின்பற்றப்பட்ட முதன்மையான உத்தி புதிய எழுதுபொருள்களுக்கான செலவை அடியோடு வெட்டிக் குறைத்தலாகும். இது, கல்விக்கான அடிப்படை உபகரணங்கள், காகிதாதிகள், கற்றல் கருவிகளை மாணவர்களுக்கு எட்டாக் கனியாக்கியது.

44 சத வீதத்தினர் புதிய சீருடைகளை வாங்குவதை குறைத்துள்ளனர் அல்லது அவற்றை வாங்குவதை முற்றிலுமாக நிறுத்திவிட்டனர்.

40.6 சத வீதத்தினர் தனியார் கல்வி வகுப்புகளில் கலந்துகொள்வதைக் குறைத்தனர் அல்லது அதனை முற்றாக நிறுத்தியுள்ளனர். 28.1 சத வீதத்தினர் மாற்று ஏற்பாடாக ஒன்லைன் வகுப்புகளுக்கு மாறியுள்ளனர்.

60.5 சதவீத குடும்பங்கள் தங்களது மொத்த குடும்ப சராசரி மாத வருமானத்தில் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளன. பொருளாதார நெருக்கடியின் காரணமாக வேலை செய்யும் நபர்களில்ஏறத்தாழ பாதி எண்ணிக்கையானோர் தங்கள் முக்கிய வேலைகளில் மாற்றங்களை எதிர்கொண்டுள்ளனர். பதிலளித்தவர்களில் 48 மற்றும் 45.8 சதவீதம் பேர் முறையே வேலை நேரம் குறைப்பு அல்லது ஊதியம் அல்லது கொடுப்பனவுகளில் வெட்டுக்கள் மற்றும் வருமான இழப்பை அனுபவிக்கின்றனர்.

ஒட்டுமொத்த மக்கள் தொகையில் ஏறக்குறைய 97.2 வீதக் குடும்பங்கள் தங்கள் வீட்டுச் செலவை நிர்வகிக்க குறைந்தபட்சம் ஒரு சமாளிக்கும் உத்தியைப் பயன்படுத்துகின்றன.

அவற்றில் 75.2 சதவீதம் பேர் உணவையும் போஷாக்கையும் குறைப்பதன் மூலம் செலவைச் சமாளிக்கும் வழிவகையை நாடியுள்ளனர். 46.4 சதவீதம் பேர் தங்கள் சேமிப்பை செல்விடுவதன் மூலம் நெருக்கடியைச் சமாளிக்க முயலுகின்றனர். 21.3 சதவீதம் பேர் கடன் வாங்கிச் சமாளிக்க முயன்றுள்ளனர் அல்லது சொத்துக்களை விற்றுள்ளனர் அல்லது அடமானம் வைத்துள்ளனர்.

இதுதான் நாட்டின் மோசமான நிலைவரம். வெளிப்படாத கள நிலைமை. பல வீடுகளில் அடுப்புகள் புகையவில்லை. மாறாக, மக்களின் வாழ்நிலைத் தவிப்பாக வயிறுகளே புகைந்து கொண்டிருக்கின்றன.

பொருளாதார மீட்சிக்கான ஒரே வழி என்று முழு நாட்டு மக்களின் மீதும் அரசு விதிக்கும் மோசமான வரி அறவீடு மக்களின் வாழ்நிலை அந்தரிப்பை மேலும் மோசமாக்கப் போகின்றது.

எப்படி வாழ்வை எதிர்கொள்ளப் போகின்றோம் என்ற பயப் பீதியுடன்தான் புத்தாண்டை எதிர்கொள்பவர்களாக நாட்டுமக்கள் உள்ளனர்.



# கட்டைபறிச்சான் மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள்

(எஸ்.கீதபொன்கலன்)

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கட்டைபறிச்சான் வடக்கு கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.





# கல்லடி வேலூரில் கசிப்பு விற்பனை; நிறுத்துமாறு கோரி கவனவீர்ப்பு!

(பழுவூரான்)

கல்லடி பிரதேசத்தில் மேற்கொள் எப்படும் கசிப்பு விற்பனையை நிறுத்தக் கோரி அந்தப் பிரதேச மக்கள் இன்று வெள்ளிக்கிழமை (29) கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டோர் கல்லடி வேலூர் கிராமசேவகர் அலுவ லகத்துக்கு முன்னால் ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி கல்லடி மணிக் கூட்டுக் கோபுரம்வரை சென்று மணிக் கூட்டுக் கோபுரத்தடியில் 'எடுக்க வேண் டும் நடவடிக்கை எடுக்க வேண்டும்', 'நிறுத்து நிறுத்து வடியை நிறுத்து' போன்ற கோசங்களை வெளியிட்டனர்.

இதன்போது பெரும் எண்ணிக் கையான பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள் கலந்து கொண்டு 'சாந்தி விற்பனை நிலையம், தேவி விற்பனை நிலையம் ஒழிக!', 'வேண்டாம் வேண் டாம் உயிர்க் கொல்லி வடிசாராயம் வேண்டாம்', 'வடிசாராயம் விற்கும் அராஜக பெண்ணுக்கு சட்ட நடவடிக்கை இல்லையா?', 'அரச அதிகாரிகளே எமது கிராமத்தில் கசிப்பு விற்பனையை முற்றாகத் தடை செய்' போன்ற வாச கங்கள் எழுதப்பட்ட அட்டைகளைத் தாங்கிச் சென்றனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த கல்லடி வேலூர் கிராம சேவகர், மண் முனை வடக்கு பிரதேச செயலர் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டோருடன் உரை யாடினர்.

அத்தோடு காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டோரிடம் ஒருவார காலத்துக் குள் உரிய நடவடிக்கை எடுப்பார் என்று உறுதியளித்தார். இதனை அடுத்து அவர்கள் கலைந்து சென்றனர். இந்த நிலையில் கோரிக்கைகள் அடங்கிய மகஜரைக் கல்லடி மதுவரித் திணைக்கள அதிகாரியிடம் ஒப்படைத்தனர்.









### ஒன்றரை வருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த

# மினுவாங்கொடை, பன்சில்கொட பால நிர்மாணப் பணி ஆரம்பம்

ஒன்றரை வருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மினுவாங்கொடை, பன்சில்கொட பாலத்தின் நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரையின் பேரில், நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் உள்ள அரச அபிவிருத்தி மற்றும் வடிவமைப்பு கூட்டுத்தாபனம் நேற்று (28) இங்கு நிர்மாணப் பணிகளை ஆரம்பித்துள்ளது.

இதன் கட்டுமானப் பணிகள் 6 மாதங்களில் நிறைவடையும். அதே நேரத்தில், இந்த இடத்துக்கு அருகில் மேலும் இரண்டு சிறிய பாலங்கள் கட்டப்படும். இதில் ஒரு பாலம் கட்டும் பணி ஏற்கனவே முடிவடைந்துள்ளது. இந்த திட்டத்துக்கு 120 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் பணிகள் மார்ச் 2021 இல் தொடங்கப்பட்டது. கொவிட் தொற்று நோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இந்தப் பாலம் கட்டி முடிக்கப்படாமையாலும் அது தொடர்பான தற்காலிக வீதியை பராமரிக்கப்படாமையாலும் கடந்த காலங்களில் அந்தப் பகுதி மக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகினர். இந்த இடத்தில் இருந்த இரும்புக் குழாய்களும் திருட்டுப் போயிருந்தன.

இந்தப் பாலம் கட்டி முடிக்கப்படாமை மற்றும் தற்காலிக வீதியை பராமரிக்காமை தொடர்பில் அண்மையில் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளின் கவனத்துக்கு மினுவாங்கொடை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க கொண்டுவந்தார்.

அதன்பின்னர், திட்டம் தொடர்பான முழுமையான அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் தனக்கு வழங்குமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அமைச்சர் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தேவையான பணிகளை முன்னெடுப்பது தொடர்பாக நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தனவுடன் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் கலந்துரையாடினார்.

இதன்படி நெடுஞ்சாலைகள் அமைச்சால் உரிய பணம் ஒதுக்கப்பட்டு அதன்படி இன்று இங்கு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மினுவாங்கொடை பிரதேச செயலர் செல்வி தனுஜா ராஜகருணா, அரச அபிவிருத்தி மற்றும் வடிவமைப்பு நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் அளவீட்டாளர் அனுர சம்பத் மற்றும் அதிகாரிகள் குழுவினர் கலந்து கொண்டனர்.

# அகம் மனிதவள மைய ஆண்டு நிகழ்வு

**(எஸ்.கீதபொன்கலன்)**

கிழக்கு மாகாணத்தை மையமாக கொண்டு, திருகோணமலையில் இயங்கி வரும் 'அகம் மனித வள மையம்' தனது நான்காவது ஆண்டு நிறைவை இன்று 29 ஆம் திகதி நிறைவு செய்கின்றது.



திருகோணமலை சர்வோதய நிலையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (27) ஆண்டு நிறைவு நிகழ்வு அகம் மனித வள நிலையத்தின் மாவட்ட இணைப்பாளர்களான கே.லவகுசராசா, ஏ.மதன் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நிறுவனத்துடன் இணைந்து செயற்படும் கிழக்கு மாகாண பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டனர்.



# குறிஞ்சிப்பிட்டி பாடசாலைக்குக் கௌரவிப்பு

(அரபாத் பஹுர்தீன் )

2023 இல் வெளியான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் கலைப் பிரிவில் 100 வீத சித்தி பெற்ற கல்பிட்டி, குறிஞ்சிப்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கான கௌரவிப்பு சான்றிதழ் அதன் அதிபர் நௌபாத்திடம் வடமேல் மாகாண ஆளுநரான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவால் வழங்கப்பட்டது.

கலைப்பிரிவில் குறிஞ்சிப்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களும் சித்தி பெற்றுள்ளனர்.

இவ்வாறு சித்தியடைந்தமைக்காக குருநாகல் மலியதேவ பாலிகா தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் நேற்று (28) வியாழக்கிழமை வடமேல் மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.இதன்போது இந்தப் பாராட்டு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சாதாரண தரப் பரீட்சை மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை போன்றவற்றில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற கற்பிட்டிக் கோட்டப் பாடசாலைகளான அல் அக்ஸா தேசிய பாடசாலை, ஆலங்குடா முஸ்லிம் மகா வித்தியாலயம், பூலாச்சேனை முஸ்லிம் மகா வித்தியாலயம், திகழி முஸ்லிம் மகா வித்தியாலயம் மற்றும் நிர்மலமாதா சிங்கள மகா வித்தியாலயம் என்பனவும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.



# 800 குடும்பங்களுக்கு அரிசி பொதிகள் இரண்டாம் கட்டமாக வழங்கி வைப்பு

(நூருல் ஹுதா உமர்)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கன மழை காரணமாக பல குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு உதவும் வகையில் அம்பாறை மாவட்ட பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த 800 குடும்பங்களுக்கு 'அயலவர்களுக்கு உதவுவோம்' என்னும் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக அரிசிப் பொதிகள் கிழக்கின் கேடயத்தின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மூலம் நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

கிழக்கின் கேடயத்தின் தலைவர் எஸ்.எம்.சபீஸ் சொந்த நிதியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு இது வழங்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் தொடர்ச்சியான மழை காரணமாகப் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்கள், தொழில் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு இந்தப் பொதிகள் வழங்கப்பட்டன.

கடந்த கொரோனா தொற்று காலத்திலும் ஜனாஸா நல்லடக்கம், நிவாரணப்பணி, எனப் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்த கிழக்கின் கேடயம் அமைப்பு அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த 1000 குடும்பங்களுக்கான உலருணவு பொதிகளை கொரோனா தொற்று காலத்திலும் வழங்கியிருந்தது.




# மாணவர் சிகை அலங்கரிப்புகள் தொடர்பில் விளம்பரப் பலகைகள்

(எம்.ஏ.ஏ.அக்தார் )

காரைதீவு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சிகை அலங்கார நிலையங்களுக்கு, பாடசாலை மாணவர்களுக்கான முறையான சிகை அலங்காரம் தொடர்பான விளம்பர பலகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த விளம்பர பலகைகள் பிரதேச செயலர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் வழங்கப்பட்டன..

இந்த நிகழ்வில் பிரதேச செயலகத்தின் சிறுவர் மகளிர் பிரிவின் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி கள உதவியாளர்கள், மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர், பொலிஸ் உத்தியோகத்தர், பாடசாலை அதிபர்கள், கிராம உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# தேசியத்தில் சாதனை பெற்ற மாணவிக்குக் கௌரவிப்பு

(அரபாத் பஹர்தீன்)

கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் தரம் 6 இல் கல்வி கற்கும் முஹம்மது நசீம் ஆயிஷா மனால் தேசிய மட்ட இரண்டாம் மொழி சிங்கள பேச்சுப் போட்டியில் திறமைச் சான்றிதழ் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவர் தமிழ்த் தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டி, மற்றும் மீலாதுன் நபிவிழா போட்டிகளில் மாகாண, மாவட்ட ரீதியில் பல்வேறு இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் கலந்து கொண்டு பல வெற்றிகளையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

# போதைக்கு அடிமையானோர் கந்தக்காடு புனர்வாழ்வுக்கு!

(த.சுபேசன்)

நாடளாவிய ரீதியாக முன்னெடுக்கப்பட்ட போதை ஒழிப்பு வாரத்தில் சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் போதைக்கு அடிமையான எட்டுப் பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸார் மேலும் தெரிவிக்கையில்,

போதை ஒழிப்பு வாரத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட பொலிஸ் பரிசோதனை நடவடிக்கைகளின் ஊடாக சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களில் கஞ்சாவுடன் 9 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

அத்துடன் சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் போதைக்கு அடிமையாகிச் சமுதாயத்துக்கு அச்சுறுத்தலாக இருப்பவர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இனங்காணப்படுவோரை உரிய மருத்துவ பரிசோதனைகள் ஊடாக புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிப் வைத்து புனர்வாழ்வளித்துச் சமூகத்துடன் இணைக்க முடியும் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.



# மக்கள் முற்போக்கு அபிவிருத்தி சங்கக் கூட்டம்

(எம்.எப்.நவாஸ் )

அக்கரைப்பற்று மக்கள் முற்போக்கு அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலர் வினாசித்தம்பி பபாகரன் தலைமையில் அக்கரைப்பற்று வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஆலையடிவேம்பு பிரதேச செயலக திட்டமிடல் பிரிவின் சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தருடன் அக்கரைப்பற்றுக் கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் 2024 - 25 ஆம் ஆண்டுக்கு உரிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

சங்கத்தின் தலைவராக சீனித்தம்பி மாணிக்கவாசகமும் செயலாளராக இராசையா கிசோக்காந்தனும் பொருளாளராக செல்வி தியாகராசா ஸ்ரீலக்சிகாவும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 18 பேர் உள்ளடங்கிய சபையும் அமைக்கப்பட்டது.

இந்தப் பொதுக் கூட்டமானது மாவட்டச் செயலரின் அனுமதிக்கு அமைய ஆலையடிவேம்பு பிரதேச செயலரால் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட பகிரங்க அறிவித்தலின் பிரகாரம் கூட்டப்பட்டது.



# தையல் பயிற்சி நிறைவு கண்காட்சி

(பாறுக் ஷிஹான்)

பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அவர்கள் சமூகத்தில் சிறந்த மனிதர்களாகவும் தலைமைத்துவம் கொண்டவர்களாகவும் உருவாக்கும் ஒரு அங்கமாக முஸ்லீம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி டயக்கோனியா அனுசரனையில் இடம் பெற்ற தையல் பயிற்சி முதற்கட்ட நிறைவும் கண்காட்சி மற்றும் விற்பனையும் கல்முனை மருதமுனை அலுவலகத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் 3 மாதங்களாக இடம்பெற்ற பயிற்சி நெறியில் வாழ்வாதாரம் மேம்படுத்தல் உதவி வழங்கப்பட்ட பெண்களின் உற்பத்தி பொருள்களும் விற்பனை செய்யப்பட்டன.

அம்பாறை மாவட்ட இணைப்பாளர் திருமதி யு.எல். ஹபீலா தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் அதிதிகளாக சிரேஷ்ட சட்டத்தரணியும் கல்முனை காதி நீதிபதியுமான எம். டபிள்யு.ஆர்.ஏ.எப். இன் சட்ட ஆலோசகருமான எப்.எம்.ஏ. அன்சார் மௌலானா விரிவுரையாளரும் மருதமுனை ஜம்மியதுல் உலமா சபை தலைவருமான அமீருள் அன்சார் மௌலானா (நளீமி) மற்றும் அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற அமைப்புகளுக்கான இணைப்பாளர் ஐ.எல்.எம். இர்பான் பயிற்சி ஆசிரியை ஜெமினா பர்வீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.







# இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்க கனடா அமைப்பின் 'வர்த்தக தீபம் 2023'

(ந.லோகதயாளன்)

இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்க கனடா அமைப்பின் 'வர்த்தக தீபம் 2023' என்னும் நிகழ்வு மற்றும் இவ்வருடத்திற்கான "இலங்கை கனடா வர்த்தக வெற்றியாளர் விருதுகள் வழங்கும் விழா" கடந்த 26ஆம் திகதி ளுஉயசடிழசழரபா ஊழளெநவெழைெ ஊநவெநச மண்டபத்தில் நடைபெற்றது.

வர்த்தகதீபம் விருது வழங்கும் விழாவுக்குக் கனடிய தமிழர் சமூகத்தில் பல்வேறு துறைகளில் பிரகாசிக்கும் தமிழ் சமூக, சமய பெரியார்கள் அழைக் கப்பட்டிருந்தனர்.

கனேடிய சமுதாயத்தின் மிகப் பெரிய உச்சத்தைத் தொட்ட தொழில் முனை வோர்களை அடையாளம் கண்டு அவர் களை மென்மேலும் வளர்ச்சிப்பாதை யில் முன்னோக்கி செல்லும் நோக்குடன் பதினோராவது ஆண்டு விருதுகள் வழங்கும் விழா சிறப்பான இராப்போச னம் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளுடன் இனிதே நடந்தது.

இந்த விழாவில் அனைத்துத் துறை சார்ந்த வர்த்தகர்களுக்கும், வளர்ந்து வரும் தொழில் முனைவோர்களுக்கும் விருதுகள் வழங்கிக் கௌரவம் செய் யப்பட்டது. சமூகம், ஊடகத்துறை சார்ந்த ஒன்பது விருதுகள் வழங்கப் பட்டன.

கனடா இலங்கை முன்னாள் வர்த் தகர்கள் சங்க தற்போதைய தலைவர் சோம சச்சிதானந்தன் தலைமை உரையில், சங்கத்தின் ஆரம்பமும்



தாயக மக்களுக்கு ஆற்றிவரும் பணிக ளையும் குறிப்பிட்டதோடு விழாவின் வெற்றிக்கு பக்கபலமாக இருந்து செயற் பட்ட முன்னாள் தலைவர்கள் கிஸ்ண கோபால், கேதா நடா மற்றும் அனைத்து நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் பாராட்டுக்களையும் ஆதரவு வழங்கிய வர்த்தக பெருமக்களுக்கும் நன்றிகளை யும் தெரிவித்தார்.

விக்னேஸ்வரன் மற்றும் ஒலிபரப் பாளர் நடா ராஜ்குமார் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். சங்கத்தின் பொருளாளர் க.கருணானந்தன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கனேடிய அரசில் வருமானவரித் திணைக்களத்தில் உயர் பதவியை வகித்தவரும் தாயக மண்ணின் பிரபல் யமான பொருளியல் ஆசிரியராகவும் மற்றும் உதவி அரச அதிபராகவும் பதவி வகித்த செந்தில் ஆறுமுகம் இம்முறை விழாவின் பிரதம விருந்தி னராக அழைக்கப்பட்டிருந்தார்.

சிதம்பர நடன பள்ளி அதிபர் கௌரி பாபுவின் இருபதுக்கும் மேலான மாண விகளது நடன நிகழ்வும் இடம்பெற்றது.

விழாவின் சிறப்பம்சமாக மெகா ரியூன்ஸ் இசைக்குழுவின் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. இதில் தாய கத்தில் இருந்து சென்ற பிரபல தாயகப் பாடகர் சாந்தனின் புதல்வர் மற்றும் வருமானவரி தனம் கனகரெட்ணம் ஆகியோரின் பாடல்கள் இடம்பெற்றன.

விருது வழங்கும் நிகழ்வைச் சிறப்பிக்க கனடாவின் முதன்மை பத்திரிகையான உதயன் பத்திரிகை ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண் டனர்.








# காத்தான்குடி மில்லத்தில் முப்பெரும் விழா!

(பழுவூரான்)

காத்தான்குடி மில்லத் பெண்கள் உயர்தரப் பாடசாலையின் 95 ஆவது ஆண்டு நிறைவு விழா, மாணவர் பரிசளிப்பு மற்றும் ஆசிரியர் கௌரவிப்பு ஆகிய முப்பெரும் விழா நேற்று வியாழக்கிழமை (28) காத்தான்குடி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தப் பாடசாலை அதிபர் திருமதி ஜெஸீமா முஸம்மில் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாகவும், மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம். அமீர் மற்றும் காத்தான்குடி நகர சபை செயலாளர் றிப்கா சபீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், காத்தான்குடி



பிரதேச கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜி.எம். ஹக்கீம் விஷேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலை நிர்வாகத்தால் கௌரவிக்கப்பட்டனர். அதிபர் பாடசாலை நிறைவேற்றுக் குழுவாலும் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் புலமைப்பரிசில் சித்தி பெற்ற மாணவ, மாணவிகள், க.பொ.த. (சாதாரண தரத்தில்) 9ஏ, 8ஏ, 7ஏ சித்தி பெற்ற மாணவிகளும், க.பொ.த. (உயர் தரத்தில்) கலை மற்றும் வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவிகள் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர்.




# மன்னார் வைத்தியசாலையின் நத்தார் புதுவருட ஒன்று கூடல்

(மன்னார் நிருபர்)

மன்னார் பொது வைத்தியசாலையில் 2024 ஆண்டுக்கான வருடாந்த பொது ஒன்று கூடல் நிகழ்வும் மற்றும் நத்தார் கொண்டாட்டமும் மன்னார் பொது வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் யோகேஸ்வரன் தலைமையின் நேற்று வியாழக்கிழமை வைத்தியசாலை பொது மண்டபத்தில் இடம்பெற்றது.

வைத்தியசாலைச் சூழலை இணக்கப்பாட்டுடனும் சுகாதார ஊழியர்களை மன அமைதியுடனும் மத நல்லிணக்கத்துடனும் வைத்திருக்கும் முகமாக வைத்திய சாலை நலன்புரி சங்கம் மற்றும் சுகாதார தொழில் சங்கங்களின் கட்டமைப்பு இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர்



ரி.வினோதன், சிறப்பு விருந்தினர்களாக மகபேற்றியல் வைத்திய நிபுணர் பாபு, அருட்தந்தை ஜேம்ஸ் ஜெனிஸ்ரன், வைத்திய சாலை நிர்வாக உத்தியோகஸ்தர் சிவயோகராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வைத்திய சாலை உத்தியோகஸ்தர்கள், பணியாளர்கள், மற்றும் சுகாதார ஊழியர்களால் பல்வேறு கலை நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டு இடம் பெற்றன. கலை நிகழ்வுகளை சிறப்பாக மேற்கொண்டவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

அதேநேரம் வைத்திய சாலையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் சுத்திகரிப்பு பணியாளர்கள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களுக்குப் புத்தாண்டு பரிசுகளும் வழங்கப்பட்டன.

# தமிழர்கள் மீது தமிழ் மொழி மீதும் பற்றுக் கொண்டவர் விஜயகாந்த்!

## புளொட் விடுத்துள்ள இரங்கல் அறிக்கையில் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஸன்)

திரையுலக வாழ்க்கைக்கு வரமுன்பும் வந்த பின்பும், அரசியல் வாழ்க்கையிலும் என்றும் தமிழ் மொழி மீதும் தமிழர்கள் மீதும் மாறாத பற்றுக் கொண்டிருந்த 'கப்டன்' விஜயகாந்த்.

இவ்வாறு தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தின் நிறுவனத் தலைவர் விஜயகாந்தின் மறைவுக்கு, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) விடுத்துள்ள ஆழ்ந்த அனுதாபத்தில் தெரிவித்துள்ளது.


இது தொடர்பாக அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

திரையுலக வாழ்க்கைக்கு வரமுன்பும் வந்த பின்பும், அரசியல் வாழ்க்கையிலும் என்றும் தமிழ் மொழி மீதும் தமிழர்கள் மீதும் மாறாத பற்றுக் கொண்டிருந்த 'கப்டன்' விஜயகாந்த்.

இலங்கைத் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை உறுதியாக ஆதரித்திருந்ததோடு போராளிகள் அமைப்புகளுடன் ஆத்மார்த்தமான உறவினைக் கொண்டிருந்தார். போராளிகளின் தேவையுணர்ந்து பெறுமதி மிக்க உதவிகளையும் வழங்கியிருந்தார்.

ஈழத்தில் தமிழ் மக்களுக்கு நீண்டு நிலைத்திருக்கக் கூடிய விடுதலை கிடைக்க வேண்டுமெனும் நிலைப்பாட்டைத் தனது வாழ்நாள் முழுவதும் கொண்டிருந்தார். அவரது மறைவு, இலங்கையில் தமிழர்களுக்குப் பாதகம் நிகழும் வேளைகளில் எல்லாம் உரிமையுடன் ஆதரவுக் கரம் நீட்டும் தமிழகத்தின் ஆத்ம பலத்துக்கு குறிப்பிடத்தக்கதோர் இழப்பாகும்.

கப்டன் விஜயகாந்த் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், தேசிய முற்போக்கு திராவிடர் கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள், ஆதரவாளர்களுக்கும் மற்றும் திரையுலகத்தாருக்கும் எமது அமைப்பின் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.-என்றுள்ளது.



# மன்னம்பிட்டி பால போக்குவரத்து காட்டாறு வெள்ளத்தால் பாதிப்பு!

## இரவில் போக்குவரத்து அனுமதி மறுப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

கடந்த சில தினங்களாக பெய்த கனமழையை அடுத்து மன்னம்பிட்டி பகுதியில் காட்டாறு வெள்ளம் கரை பரண்டோடுகிறது.

இதனால் பிரதான வீதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கபறனை மட்டக்களப்பு வீதியில் அமைந்துள்ள மன்னம்பிட்டி பாலமருகே உள்ள நீண்ட தாம்போதிக்கு மேலால் வெள்ளம் பல அடி உயரத்தில் பாய்ந்து செல்கின்றது.

இதனால் இரவு வேளையில் எந்த ஒரு வாகனத்தையும் இந்த வீதியில் பயணிகிகப் பொலிஸார் அனுமதிக்கவில்லை.

பொலிஸார் பகலில் பாரிய வாகனங்களை மட்டும் கண்காணிப்போடு அனுமதித்து வருகின்றனர். சிறிய வாகனங்கள் முற்றாக அனுமதிக்கப்படவில்லை.

இதனால் மட்டக்களப்புக்கு வரும் வாகனங்கள் மீண்டும் கபறனை சென்று திருமலை வாகரை வீதியாக பயணித்து வருகின்றன.

ஒரு சில நாள்களில் நிலைமை வழமைக்குத் திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நடிகர்கள் கமல், ரஜினிகாந்த் விஜயகாந்துக்கு நேரில் அஞ்சலி







"விஜயகாந்தின் அன்புக்கு அனைவரும் அடிமையாகி விடுவார்கள். அதனால், தான் அவருக்கு அத்தனை நண்பர்கள். அவருக்காக உயிரை கொடுக்க கூட தயாராக இருந்தனர் என்று நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்தார்.

சென்னை தீவுத் திடலில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தின் உடலுக்கு நேரில் அஞ்சலிக்கு செலுத்திய ரஜினிகாந்த் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"கன்னியாகுமரி படப்பிடிப்பில் இருந்து இங்கே வருகிறேன். மனம் மிகவும் கனக்கிறது. விஜயகாந்த் பற்றி பேச எவ்வளவோ இருக்கிறது. நட்புக்கு இலக்கணம் விஜயகாந்த். ஒருமுறை பழகிவிட்டால், வாழ்க்கை முழுக்க அதனை மறக்கவே முடியாது. அவரது அன்புக்கு அனைவரும் அடிமையாகி விடுவார்கள். அதனால் தான் அவருக்கு அத்தனை நண்பர்கள். அவருக்காக உயிரை கொடுக்க கூட தயாராக இருந்தனர். நண்பர்கள் மீது கோபப்படுவார். அரசியல்வாதிகள் மீது கோபப்படுவார். ஊடகங்கள் மீது கூட கோபப்படுவார். ஆனால் அவர் மீது யாருக்கும் கோபம் வராது. காரணம் அவரது கோபத்தில் சுயநலம் இருக்காது. தைரியத்துக்கும் வீரத்துக்கு இலக்கணமானவர்.

மலேசியா, சிங்கப்பூர் நட்சத்திர கலைவிழாவை முடித்துவிட்டு வரும்போது எல்லாரும் கிளம்பிவிட்டார்கள். நான் வருவதற்கு கொஞ்சம் நேரமாகிவிட்டது. அப்போது ரசிகர்கள் என்னை சூழ்ந்து கொண்டனர். என்னால் அங்கிருந்து வெளியேறவே முடியவில்லை. இதனை பேருந்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த விஜயகாந்த், இறங்கிவந்து ஒரு இரண்டு நிமிடத்தில் பாதி கூட்டத்தை அங்கிருந்து அப்புறப்படுத்தினார்.

அப்படி உடல்பலம் கொண்ட ஒரு மனிதனை கடைசி நாட்களில் பார்க்கும்" - என்கிறார்.

இதேவேளை, "எளிமை, நட்பு, பெருந்தன்மை உள்ளிட்ட வார்த்தைகளை ஒரே மனிதருக்கு மட்டுமே சொல்ல முடியும்" என விஜயகாந்தின் உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்திய நடிகர் கமல் தெரிவித்துள்ளார். சென்னை தீவுத் திடலில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தின் உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்திய நடிகர் கமல்ஹாசன் பேசுகையில்,

"எளிமை, நட்பு, பெருந்தன்மை உள்ளிட்ட வார்த்தைகளை ஒரே மனிதருக்கு மட்டுமே சொல்ல முடியும். அது விஜயகாந்த்தான். நட்சத்திர அந்தஸ்து வருவதுக்கு முன்னர் என்னிடம் எப்படி பழகினாரோ, அப்படி தான் இவ்வளவு உயரம் வந்த பிறகும் பழகினார்.

விஜயகாந்த்திடம் எந்த அளவுக்கு பணிவு உள்ளதோ, அந்த அளவுக்கு நியாயமான கோபமும் வரும். அதுவே அவரிடம் எனக்குப் பிடித்தது. அவரின் கோபத்தின் ரசிகன் நான். அதனால் தான் அவர் மக்கள் பணிக்கு வந்தார் என்றே நான் நினைக்கிறேன். இப்படிப்பட்ட நேர்மையாளரை இழந்திருப்பது ஒருவகை தனிமை தான். நல்ல நண்பருக்கு விடைகொடுத்துவிட்டு செல்கிறேன்" என்றார்.

# ஈழத் தமிழர் உரிமைக்காக போராடினார் விஜயகாந்த்



கடந்த 1984 ஆம் ஆண்டு ஈழத்தமிழர் படுகொலையை கண்டித்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட விஜயகாந்த், ஆளுநரை சந்தித்து மனு அளித்தார்.

1986 ஆம் ஆண்டிலும் ஈழத் தமிழர் விவகாரம் தொடர்பாக சென்னையில் விஜயகாந்தும், அவரது ரசிகர் மன்றத்தினர் தமிழகம் முழுவதும் உண்ணாவிரதம் இருந்தனர். ஈழத் தமிழர்களுக்காக தனது பிறந்த நாள் கொண்டாட்டத்தையும் தவிர்த்தார்.

1982 இல் தனது ரசிகர் மன்றத்தை 'தமிழ்நாடு விஜயகாந்த தலைமை ரசிகர் மன்றம்' என மாற்றிய பின்னர், பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். 2000 ஆம் ஆண்டில் ரசிகர் மன்றத்துக்கு தனி கொடியை அறிமுகப்படுத்தினார்.

2002 இல் பா.ம.கவுக்கும், விஜயகாந்துக்கும் தொடங்கிய மோதல், 2005 இல் தே.மு.திகவை தொடங்கச் செய்தது. தொடர்ந்து அரசியலில் பல்வேறு ஏற்ற, இறக்கங்களை விஜயகாந்த் சந்தித்தார்.

நடிகராக வளர்ந்து வந்த காலத்திலேயே தனது ரசிகர் மன்றம் மூலம் மக்களுக்கான நலத் திட்டங்களில் அதிக அளவில் முனைப்புக் காட்டியவர் விஜயகாந்த். ஏழை மக்களின் தேவைகளை அறிந்து செயல்பட்ட அவர், தேவையான விஷயங்களுக்கு நிதியுதவி, நன்கொடை அளித்தல், இளைஞர்களுக்கான பல்வேறு முன்னெடுப்புகள், இலவசத் திருமணங்கள், விளையாட்டு அகாடமி என பல்வேறு துறைகளில் முத்திரை பதித்தார்.

மேலும், ஈழத் தமிழர் உரிமைக்கான போராட்டம், ஊழலுக்கு எதிரானப் போராட்டம் என பல்வேறு போராட்டங்களிலும் தன்னை ஈடுபடுத்தி உழைத்தவர் விஜயகாந்த்.

# விஜயகாந்துக்கு இறுதி அஞ்சலி: கண்ணீருடன் மக்கள் பிரியாவிடை








சென்னை தீவுத்திடலில் வைக்கப்பட்ட தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் உடலுக்கு மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர். அரசியல் பிரமுகர்களும், திரைப் பிரபலங்களும் விஜயகாந்த் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினர்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் நேற்று காலை காலமானார். அவரது மறைவையடுத்து சில மணி நேரம் சாலிகிராமம் வீட்டில் வைக்கப்பட்ட அவரது உடல் அங்கிருந்து ஊர்வலமாக கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. அலுவலகத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அங்கு கட்சித் தொண்டர்களும், ரசிகர்களும், பொதுமக்களும் குவிந்தனர். கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பொலிஸார் திணறினர். இரவு வரை அங்கே பல்வேறு பிரபலங்களும் வந்து அஞ்சலி செலுத்தினர்.

நடிகர் விஜய், இசையமைப்பாளர் இளையராஜா ஆகியோர் வந்து கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்திச் சென்றனர். தென் மாவட்டங்களில் இருந்தும், கர்நாடகாவில் இருந்தும்கூட ரசிகர்கள் வந்திருந்தனர்.

வரிசையில் நின்றிருந்த சிலர் விஜயகாந்த் தமிழக முதல்வராக வந்திருக்கலாம். மக்கள் அந்த வாய்ப்பை இழந்துவிட்டனர் என்று கூறினர்.

விஜயகாந்த் உடலுக்கு மக்கள் இறுதி அஞ்சலி செலுத்த போதிய முன்னேற்பாடுகள் செய்யப்படாததால் நெரிசலில் மக்கள் சிக்கி அவதிக்குள்ளாயினர்.

இதன் காரணமாக விஜயகாந்தின் உடல் தீவுத்திடல் மைதானத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. தீவுத்திடலில் சென்னை மாநகராட்சி சார்பில் குடிநீர் வசதி, கழிவறை வசதி என பல்வேறு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

மக்கள் அஞ்சலி செலுத்தி சென்று திரும்ப ஏதுவாக பாதைகள் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் திரளாக வந்து அஞ்சலி செலுத்தினர். பாதுகாப்புப் பணியில் ஆயிரக்கணக்கான பொலிஸார் ஈடுபட்டனர்.

இன்று மதியம் 1 மணியளவில் தீவுத் திடலில் இருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்ட விஜயகாந்த் உடல் இன்று மாலை 4.30 மணியளவில் கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. அலுவலகத்தில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

அவருக்கு முழு அரசு மரியாதையுடன் இறுதிச் சடங்கு செய்யப்படும் என்று தமிழக அரசு தெரிவித்திருந்தார்.

விஜயகாந்த் உடலுக்கு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர். விஜயகாந்தின் மனைவி பிரேமலதா மகன்கள் சண்முகபாண்டியன், பிரபாகரன், மைத்துனர் சுதீஸ்க்கு ஆறுதல் தெரிவித்தார். அவருடன் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, முன்னாள் அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பா.ஜ.க. பிரமுகர்கள் வந்திருந்தனர்.

பின்னர் பேசிய அண்ணாமலை, "பிரதமர் மோடியின் முழுமையான அன்பைப் பெற்ற விஜயகாந்த் ஏழைகளின் பங்காளன். அவரின் புகழ் என்றும் ஓங்கியிருக்கும்" என்றார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் நிர்மலா சீதாராமன்,

"கெப்டன் இளகிய மனம் கொண்டவர். அவர் மறைவு வருத்தமளிக்கிறது. அரசியலில் மனிதநேயத்துடன் உள்ள தலைவரை நாம் பார்க்கமுடியாது. அப்படிப்பட்டவரை இழந்துவிட்டோம். கடைசி முறையாக அவருடைய முகத்தை ஒருமுறை பார்த்துவிட மாட்டோமா என்று வந்துள்ள தொண்டர்களுடன் துக்கத்தைப் பகிர்ந்து கொள்கிறோம். தன் பணத்தால் மக்களுக்கு உதவிய தலைவரை இழந்துவிட்டோம்.

அவரை இழந்துவாடும் குடும்பத்தினருக்கு, தொண்டர்களுக்கு ஆழ்ந்த இரங்கல். பிரதமர் மோடி உடனடியாக இரங்கல் குறிப்பு பதிவிட்டதோடு, நம்மை நேரடியாக இங்கே அனுப்பிவைத்தார். ஆளுநர் சார்பில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியுள்ளேன்" என்றார்.

விஜயகாந்த் மறைவுக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

"விஜயகாந்தின் புன்சிரிப்பை மறக்க முடியாது. அவர் தனது மகனுக்கு பிரபாகரன் என்று பெயர் சூட்டி தமிழீழ விடுதலை வேட்கைக்கு வடிவம் கொடுத்தவர்" என்று அவர் கூறியுள்ளார்.

# நிரந்தர போர் நிறுத்தம் ஏற்பட்டால் மாத்திரமே இஸ்ரேலிய பணயக் கைதிகளுக்கு விடுதலை!

## - ஹமாஸ் அமைப்பினர் எச்சரிகை



நிரந்தர போர் நிறுத்தம் ஏற்பட்டால் மாத்திரமே இஸ்ரேல் பிணைக்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என ஹமாஸ் அமைப்பினர் எச்சரித்துள்ளனர் என செய்திகள் வெளியாகியுள்ளது.

சுமார் 2 மாதங்களைத் தாண்டி இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் இடம்பெற்று வருகிறது. இந்த நிலையில், உலக நாடுகள் போர்நிறுத்தத்திற்கு வலியுறுத்திய போதும் போர் தொடர்ந்த வண்ணமே உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்து இஸ்ரேல் இராணுவம் காசா மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இதனால், சுமார் 23 லட்சம் பாலஸ்தீனர்கள் காசாவில் வசித்து வரும் நிலையில், இஸ்ரேல் தாக்குதலால் சுமார் 85 சதவீத மக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி முகாமில் தங்கும் நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

அதுமாத்திரமன்றி, வடக்கு காசா பகுதியில் தாக்குதல் நடத்தி வந்த இஸ்ரேல், தெற்கு பகுதிகளிலும் தாக்குதலை விரிவுப்படுத்தியுள்ளது.

இதனால் மக்கள் தங்க இடமின்றி அல்லாடும் நிலை ஏற்பட்டுள்ளதனால், உலக நாடுகள் போர் நிறுத்தத்திற்கு வற்புறுத்திய போதிலும், போர் நிறுத்தப்படாமல் தொடர்ந்த வண்ணமே உள்ளது. இந்த நிலையில் நிரந்தர போர் நிறுத்தம் ஏற்பட்டால் மட்டுமே இஸ்ரேல் பிணைக்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என ஹமாஸ் அமைப்பினர் எச்சரித்துள்ளனர்.

அதேவேளை காசாவில் இருந்து ஹமாஸ் அமைப்பினரின் அச்சுறுத்தல் இஸ்ரேலுக்கு இல்லை என்பது உறுதி செய்யப்படும் வரை தாக்குதல் தொடரும், இன்னும் மாதக் கணக்கில் போர் நீடிக்கலாம் எனவும் இஸ்ரேல் பதிலளித்துள்ளது.

# ஈபிள் கோபுரத்துக்கு காலவரையின்றி பூட்டு!



பிரான்சின் தலைநகர் பாரிசில் உள்ள உலகப் புகழ்பெற்ற ஈபிள் கோபுரத்தின் மேலே செல்வதற்கான 300 மீட்டர் பகுதி காலவரையின்றி மூடப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஈபிள் கோபுரத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்களுடன் இடம்பெற்ற ஒப்பந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததை அடுத்து ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், 134 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஈபிள் கோபுரத்தின் கீழே கண்ணாடியால் மூடப்பட்டுள்ள திறந்தவெளி பகுதிக்கு செல்ல சுற்றுலா பயணிகள், மக்கள் அனுமதிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

# அமெரிக்காவிடமிருந்து உக்ரைனுக்கு மேலும் 250 மில்லியன் டொலர்

உக்ரைனுக்கு மேலும் 250 மில்லியன் டொலர் இராணுவ உதவிகளுக்கு வெள்ளை மாளிகை அனுமதி அளித்துள்ளது.

இதில் வான் பாதுகாப்பு, ஆட்டிலரி மற்றும் ஆயுதங்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யாவுடனான போரில் மேற்குலக நாடுகளின் உதவிகள் கிடைக்காவிட்டால் போர் முயற்சி மற்றும் தனது திறைசேரி மிகவும் ஆபத்தான நிலையை அடையுமென உக்ரைன் தெரிவித்திருந்த நிலையில் அமெரிக்காவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

# கப்டன் விஜயகாந்த்தின் மறைவு உலக வாழ் தமிழருக்குப் பேரிழப்பு

## மருதபாண்டி ராமேஸ்வரன் எம்.பி. இரங்கல்

(தலவாக்கலை நிருபர்)


தேசிய முற்போக்குத் திராவிடக் கழக கட்சியின் தலைவர் கப்டன் விஜய காந்த்தின் மறைவு தமிழகத்துக்கு மட்டுமின்றி உலக வாழ் தமிழ் மக்க ளுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப் பாகும்.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரு மான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கப்டன் விஜயகாந்த் மறைவை முன்னிட்டு அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உடல் நலக்குறைவால் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த தேசிய திராவிட முக்னேற்றக் கழகத் தலைவர் கப்டன் விஜயகாந்த் உயிரி ழுந்த செய்தியறிந்து மிகவும் மன வேதனை அடைந்தேன்.

தேசிய முற்போக்கு திராவிடக் கழ



கம் 2005 ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழ கம் என திராவிடக் கட்சிகளால் ஆளப் பட்ட தமிழ்நாட்டில் ஒரு புதிய மாற்றாக தேசிய தழராவிட முன்னேற்றக் கழ கத்தை அமைந்தது.

கப்டன் விஜயகாந்த் ஒரு புதிய அரசியல் பாணியை தமிழ் நாட்டில் உருவாக்கினார். கப்டன் விஜயகாந்த் தமிழ் திரையுலகின் ஜாம்பவான், அவரது கம்பீரமான நடிப்பு கோடிக் கணக்கானவர்களின் இதயங்களைக் கவர்ந்தது.

ஒரு அரசியல் தலைவராக, தமிழ் நாட்டின் அரசியலில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய அவர், கலைத் துறையின் ஒரு சகாப்தம், மிக தைரிய மானவர், மிக எளிமையானவர், எதையும் ஒளிவு மறைவின்றி முகத் துக்கு முகம் பேச கூடியவர்.

பன்முகத்தன்மை கொண்ட கப்டன் விஜயகாந்த், திரைத்துறையிலும் அரசியலிலும் சாதித்து காட்டியவர். தமிழுக்காக மிகவும் பாடுப்பட்ட புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் மறைந்தாலும் அவர் விட்டு சென்ற பணிகள் தொடரும். உலகெங்கும் வாழும் தமிழர்களின் இதயத்தில் என்றும் வாழ்வார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி மலையக மக்கள் சார்பாக எனது ஆழ்ந்த இரங்கலை பகிர்ந்து கொள்கின்றேன்.– என்றுள்ளது.




# கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு; 15 பேர்வரை இனங்காணப்பட்டனர்!

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

(பரந்தன் )

வெளி மாவட்டங்களில் தங்கியிருந்து வருகை தந்த நிலையில் 15 பேரிடையே கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு தொற்று இனங்காணப்பட்டுள்ளது என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நடை பெற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போதே இந்தத் தகவல் வெளியிடப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு அதா வது கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பல்கலைக்கழக கல்விக்கு சென்றவர்கள் மற்றும் தொழில் நிமித்தம் சென்று திரும்பிய 15 பேர் டெங்கு தொற்றுக்கு ஆளான நிலையில் அடையாளம் காணப்பட்டுள் ளனர்.

ஆனால் கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை எந்த இடங்களில் டெங்கு நோயாளர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை. அத்துடன் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் விழிப்புணர்வு செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளரால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (27) கிளிநாச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட் டத்தில் சுகாதாரம் தொடர்பில் கலந்து ரையாடப்பட்ட போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.



# மூதூர் பிரதேச கலாசார விழா!

(எம்.ஏ.ஏ.அக்தார்)

மூதூர் பிரதேச கலாசார விழா பிரதேச செயலர் எம்.பீ. எம். முபாறக் தலைமையில் தோப்பூர் உப பிரதேச செயலக பிரிவில் மூதூர் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடை பெற்றது.

மூதூர் பிரதேச கலாசார விழாவின் பிரதம விருந்தினராக மாவட்ட செயலாளர் சமிந்த கெட்டியாராச்சி கலந்து கொண்டார். நீர் பாசன அமைச்சின் பணிப்பாளர் கே. எம். எம். மர்சூக் , மூதூர் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி இஷட்.எம்.எம். நளீம் , தோப்பூர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியர் என்.எம். கஸ்ஸாலி, மூதூர் பிரதேச சபை செயலாளர் திருமதி எஸ். சத்தியஜோதி, மூதூர் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.ஜி.ஜே.யு. சோமநுவர ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

மூதூர் உதவிப் பிரதேச செயலர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், கிராம நிர்வாக உத்தியோகத்தர், சமுர்த்தித் தலைமை முகாமையாளர், முன்னாள் மூதூர் பிரதேச கலாசார செயலர், சர்வ மத தலைவர்கள், கலாசார அதிகாரசபை செயலர், சிரேஷ்ட கலைஞர்கள், இளம் கலைஞர்கள், தோப்பூர் கலை இலக்கிய பேரவை கலைஞர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரதேச வாசிகளும் கலந்து கொண்டனர்.

மூதூர் பிரதேச செயலரால் மாவட்ட செயலர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். நினைவுச் சின்னமும் வழுங்கப்பட்டது. அத்துடன் மூதூர் பிரதேச கலாசார விழாவில் வெளியிடப்பட்ட முத்து மலர் சஞ்சிகையின் முதற் பிரதியினையும் மாவட்ட செயலாளரிடம் வழங்கி வைத்தனர்.

மூதூர் பிரதேசத்தில் பல்வேறு துறைகளில் திறமைகளை வெளிக் கொணர்ந்த சிரேஷ்ட கலைஞர்களுக்கும், இளம் கலைஞர்களுக்கும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

பிரதேச கலாச்சார விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்களும், நினைவுச் சின்னங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.





